குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, நாமக்கல்
முன்னிலை - திருமதி எம். ஜெயந்தி,எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,
நாமக்கல்
2021 ம் ஆண்டு மார்ச் திங்கள் 03 ம் நாள் புதன்கிழமை

ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.677/2019

புகார்தாரர்	-	சண்முகம்(62), த/பெ.ராமசாமி, க.எண்.294, கே.கே.பி. தெரு, போதுபட்டி ரோடு, ஏ,எஸ்பேட்டை, நாமக்கல் டவுன், நாமக்கல் வட்டம் மற்றும் மாவட்டம்
எதிரி	-	சபரிகுமார்(23), த/பெ.குமார், க.எண்.14/1, பொன்னம்மாபுதூர், படத்தான்குட்டை, பெரியகுளம், சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல் மாவட்டம்
குற்றம்	-	138 NI Act
தீர்வு	-	U/s.255(1) Cr.P.C

இவ்வழக்கானது கடந்த 15.11.2019 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.தங்கமுருகன்,B.A.,B.L., அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.Ra.அய்யாவு,M.Sc.,B.L.,அவர்களும் ஆஜராகி எடுத்துரைத்தும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

தீர்ப்புரை

குற்றமுறையீட்டாளர் எதிரிக்கு எதிராக மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழ் தாக்கல் செய்துள்ள தனிப்புகாரின் சுருக்கம் பின்வருமாறு.

இவ்வழக்கானது எதிரி புகார்தாரருக்கு ரூ.3,50,000/-த்திற்கு வழங்கிய காசோலையானது எதிரியின் வங்கிக் கணக்கில் போதிய பணமில்லை என்ற குறிப்புடன் திருப்பப்பட்டது என்பதற்காக மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு.

2. புகார்தாரரின் மனுவின் சுருக்கம்-

இவ்வழக்கின் புகார்தாரரிடம் எதிரி குடும்ப அவசர செலவிற்காக கடந்த 24.08.2019 ம் தேதி ரூ.3,50,000/-ம் 30 நாட்களில் திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டு கைமாற்றுக் கடனாக பெற்றுக்கொண்டுள்ளார், பின்னிட்டு

மேற்படி கடனை திரும்ப செலுத்தும் பொருட்டு எதிரி வங்கிக் கணக்கு வைத்துள்ள அலகாபாத் வங்கி, நாமக்கல் பரமத்தி ரோடு கிளையின் காசோலை எண்.635604 ஐ ரூ.3,50,000 க்கு 06.09.2019 என பூர்த்தி செய்து கொடுத்துள்ளார். மேற்படி காசோலையை வாதி வங்கி கணக்கு வைத்துள்ள Kotak Mahendra வங்கி, நாமக்கல் கிளையில் அன்றைய தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்ததில் காசோலையானது 09.09.2019 ம் தேதி எதிரியின் வங்கிக் கணக்கில் போதிய பணமில்லை (Funds Insufficient) என காரணம் காட்டி திருப்பபப்பட்டுள்ளது. மேற்படி காசோலை திரும்பியது குறித்து வழக்கறிஞர் மூலம் 19.09.2019 ம் தேதி அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேற்படி அறிவிப்பை எதிரி 28.09.2019 ம் தேதி பெற்றுக்கொண்டு இதுநாள் வரை காசோலைக்குரிய தொகையோ பதில் அறிவிப்போ கொடுக்கவில்லை என்றும், புகார்தாரரை ஏமாற்றி மோசடி செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தனது வங்கிக் கணக்கில் போதிய பணமில்லை என தெரிந்திருந்தும் வாதிக்கு காசோலை கொடுத்து மோசடி செய்துள்ளதாக எதிரிமீது தக்க நடவடிக்கை எடுக்ககோரி மாற்றுமுறை ஆவணச் சட்டம் 138-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட தனிப்பிராது.

3) குற்ற முறையீட்டாளரின் சத்திய பிரமாண வாக்குமூலம் குவிமுச பிரிவு 200 ன் படி பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றமுறையீட்டாளரின் சத்திய பிரமாண வாக்குமூலத்தையும், தனி பிராதுடன் இணைக்கப்பட்டுள்ள வழக்கு ஆவணங்களையும் கவனமாக பரிசீலனை செய்து பார்த்ததில் எதிரிக்கு எதிராக வழக்கு விசாரணை செய்ய மாற்றுமுறை ஆவணச் சட்ட பிரிவு 138-ன் படி முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு கு.வி.மு.ச. பிரிவு 204(3)ன் கீழ் அழைப்பாணையுடன் குற்றமுறையீட்டு நகலையும் இணைத்து அனுப்பப்பட்டது.

4) எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும், எதிரியிடம் குற்றம் பற்றி குவிமுச பிரிவு 251 ன் படி விளக்கி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்துரைத்து பொய் வழக்கு என்றும், சாட்சிகள் விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். அதனால் குற்றமுறையீட்டாளர் தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது.

5) குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றமுறையீட்டாளர் சண்முகம் ம.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டும், ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஏதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6) புகார்தாரர் தரப்பு சாட்சியின் சுருக்கம்-

ம.சா.1 சண்முகம் தனது சாட்சியத்தில் எதிரி கடந்த 24.08.2019ம் தேதி குடும்ப அவசர தேவைக்காக ரூ.3,50,000/-ம் 30 நாட்களில் திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டு கைமாற்றுக் கடனாக பெற்றுக்கொண்டு பின்னிட்டு 30 நாட்கள் கழித்து மேற்படி தொகைக்கு ஆதரவாக எதிரி வங்கிக் கணக்கு வைத்துள்ள அலகாபாத் வங்கி, நாமக்கல் கிளை காசோலை எண்.635604ஐ 06.09.2019 தேதியிட்டு வழங்கியுள்ளார், அந்த காசோலை அசல் ம.சா.ஆ.1 ஆகவும், மேற்படி காசோலையை வாதி வங்கி கணக்கு உள்ள Kotak Mahendra Bank, நாமக்கல் கிளையில் அன்றைய தேதியிலேயே வசூலுக்கு தாக்கல் செய்ததில் காசோலையானது 09.09.2019ம் தேதி எதிரியின் வங்கிக் கணக்கில் போதிய பணமில்லை (Insufficiet Funds) என திருப்பப்பட்டதாகவும், அந்த ரிட்டன் மெமோ அசல் ம.சா.ஆ.2 ஆகவும், மேற்படி காசோலை திரும்பியது குறித்து வழக்கறிஞர் மூலம் 19.09.2019ம் தேதி அறிவிப்பு அனுப்பியதாகவும், அந்த அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ.3 ஆகவும், மேற்படி அறிவிப்பை எதிரி 28.09.2019ம் தேதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் Track consignmenty with postal receipt அசல் ம.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளார். ம.சா.1 தன்னுடைய சாட்சியத்தில் பிராதில் உள்ள சங்கதிகளை வலியுறுத்தி சாட்சியமளித்துள்ளார்.

இத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7) குற்றமுறையீட்டாளர் தரப்பு சாட்சியத்திலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் குறித்து குவிமுச பிரிவு 313(பி)ன் படி கேள்வி கேட்டபோது எதிரி பொய் சாட்சியம் என்றும், தனது தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டு என்றும் கூறியதால் எதிரி தரப்பு சாட்சியத்திற்கு உத்திரவிடப்பட்டது. பின்னிட்டு எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரையும் விசாரணை செய்யாததால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதம் கேட்டகப்பட்டது.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், புகார்தாரர் எதிரிமீது சுமத்தப்பட்ட மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138-ன் படியான குற்றம் இந்நீதிமன்றத்தின் முன் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

9) தீர்வு-

மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138-ன் உட்கூறுகள் நிரூபிக்கப்

பட்டிருந்தால் மட்டுமே எதிரிமீதான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாகும். உட்கூறுகள் பின்வருமாறு-

அ) எதிரி தன்னுடைய சட்டப்படியான கடனை தீர்க்க வாதிக்கு காசோலையை கொடுத்திருக்க வேண்டும்.

ஆ) எதிரி கொடுத்த காசோலையை வாதி பணமாக்க வங்கியில் செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

இ) எதிரி கொடுத்த காசோலை பணமாகாமல் மதிப்பிழந்து திரும்பியிருக்க வேண்டும்.

ஈ) காசோலை பணமாகாமல் திரும்பியது குறித்து எதிரிக்கு சட்டப்படியான அறிவிப்பு அனுப்பியிருக்க வேண்டும்.

உ) எதிரி அறிவிப்பை பெற்ற பிறகும் வாதிக்கு கடனை திருப்பி செலுத்த தவறியிருக்க வேண்டும்.

மேற்கண்ட 5 உட்கூறுகளும் நிரூபிக்கப்பட்டால் மட்டுமே எதிரிமீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டதாகும்.

அ) எதிரி தன்னுடைய சட்டப்படியான கடனை தீர்க்க வாதிக்கு காசோலையை கொடுத்திருக்க வேண்டும்.

(அ-i) குற்றமுறையீட்டாளர் தரப்பில் எதிரிமீது முதலாவது உட்கூறு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பரிசீலனை செய்து பார்க்கையில் எதிரி கடந்த 24.08.2019 ம் தேதி குடும்ப அவசர தேவைக்காக ரூ.3,50,000/-ம் 30 நாட்களில் திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டு கைமாற்றுக் கடனாக பெற்றுக்கொண்டுள்ளர். பின்னிட்டு 30 நாட்கள் கழித்து மேற்படி தொகைக்கு ஆதரவாக எதிரி வங்கிக் கணக்கு வைத்துள்ள அலகாபாத் வங்கி, நாமக்கல் கிளை காசோலை எண்.635604 ஐ 06.09.2019 தேதியிட்டு வழங்கியுள்ளார். மேற்படி காசோலையை வாதி வங்கி கணக்கு உள்ள Kotak Mahendra Bank, நாமக்கல் கிளையில் அன்றைய தேதியிலேயே வசூலுக்கு தாக்கல் செய்ததில் காசோலையானது 09.09.2019 ம் தேதி எதிரியின் வங்கிக் கணக்கில் போதிய பணமில்லை (Insufficient Funds) என திருப்பபட்டுள்ளது. காசோலை திரும்பியது குறித்து வழக்கறிஞர் மூலம் 19.09.2019 ம் தேதி அனுப்பிய அறிவிப்பை எதிரி 28.09.2019 ம் தேதி பெற்றுக் கொண்டு இதுநாள் வரை காசோலைக்குரிய தொகையோ பதில் அறிவிப்போ கொடுக்கவில்லை என்றும், புகார்தாரரை ஏமாற்றி மோசடி செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில்

தனது வங்கிக் கணக்கில் போதிய பணமில்லை என தெரிந்திருந்தும் வாதிக்கு காசோலை கொடுத்து மோசடி செய்து மாற்றுமுறை ஆவணச் சட்டம் 138-ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதால் எதிரிக்கு தக்க தண்டனை விதித்தும் புகார்தாரருக்கு இழப்பீடு வழங்கியும் தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

அ - ii) இதனை மறுத்து எதிரி தரப்பில் புகார்தாரருக்கும் எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும், தொழில் நிமித்தமாக செக்யூரிட்டிக்காக எதிரியின் தந்தையால் கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரி கல்லூரியில் படித்து வந்ததால் காசோலைத் தொகையை பெற்றுக்கொள்ள வாய்ப்பு இல்லை என்றும், ஒரு மாத காலத்தில் எதிரி திருப்பி தருவதாக ஒப்புக்கொண்டு 24.08.2019 ல் கடன் வாங்கியதாக புகாரில் உள்ள நிலையில் 06.09.2019 ம் தேதியே 30 நாட்கள் கழித்து புகார்தாரர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க எதிரி கையொப்பம் செய்து காசோலை வழங்கியதாக உள்ளது முரண்பாடுடையது என்றும், எனவே வழக்கு காசோலையை சட்டப்படி தீர்க்க வேண்டிய கடப்பாடு எதிரிக்கு இல்லை என்பதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

அ - iii)	காசோலை தேதி	- 06.09.2019
	வசூலுக்கு தாக்கல் செய்த தேதி	- 06.09.2019
	காசோலை திரும்பிய தேதி	- 09.09.2019
	வழக்கறிஞர் அறிவிப்பு	- 19.09.2019
	அறிவிப்பு சார்வான தேதி	- 28.09.2019

அறிவிப்பு சார்வான 28.09.2019 ம் தேதியில் இருந்து 15 நாட்களுக்குள் எதிராளியானவர் காசோலைத் தொகையை திருப்பி செலுத்த வேண்டும். ஆனால் குறிப்பிட்ட 13.10.2019 க்குள் தொகையை திருப்பி செலுத்தாததால் புகார்தாரரால் இவ்வழக்கு 22.10.2019 ல் தொடரப்பட்டுள்ளது. புகாரில் கால தாமதம் இல்லை.

அ - iv) புகார்தாரர் தரப்பில் எதிரியின் தந்தையும் புகார்தாரரும் லாரி தொழில் செய்து வந்த வகையில் எதிரியின் பழக்கம் ஏற்பட்டதாகவும், எதிரி தனது குடும்ப அவசர செலவிற்காக 30 நாட்கள் அவகாசத்தில் கைமாற்றுக் கடனாக ரூ.3,50,000 ம் கேட்டதன்பேரில் 24.08.2019 ம் தேதியன்று புகார்தாரர் வீட்டில்வைத்து ரொக்கமாக கொடுத்ததாகவும், பிறகு 30 நாட்கள் முடிந்த பிறகு ரூ.3,50,000 ஐ திருப்பி தராமல் இருக்கவே கடனை திருப்பி கேட்டபோது எதிரி தான் கணக்கு வைத்துள்ள அலகாபாத் வங்கி காசோலையை 06.09.2019 தேதியிட்டு கையொப்பம் செய்து கொடுத்ததாக வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் புகாரில் உள்ளது. இது பொறுத்து ம.சா.1 குறுக்கு

விசாரணையிலும் எந்த தேதியில் எதிரி என்னிடம் பணம் வாங்கினார் என்றால் **24.08.2019**ல் வாங்கினார். வாங்கும்போதே காசோலையை கொடுத்தாரா என்றால் இல்லை. ஒரு மாத காலத்திற்கு பின்பு பணத்தை திருப்பி தருவதாக சொன்னார். ஒரு மாதம் கழிந்த பிறகும் பணத்தை தரவில்லை என்பதால் பணத்தை கேட்டதற்கு காசோலையை கொடுத்தார். மேற்படி விசயத்தை என் நோட்டீசிலும், புகாரிலும் சொல்லி உள்ளேனா என்றால் ஆமாம் என புகாரினை ஒத்துரைத்து சாட்சியமளித்துள்ளார்.

அ -v) 24.08.2019ல் எதிரி புகார்தாரரிடம் ஒரு மாத காவலத்தில் திருப்பி தருவதாக சொல்லி பணத்தை வாங்கிய பிறகு ஒரு மாதத்தில் திருப்பி தராததால் புகார்தாரர் பணத்தை திருப்பி செலுத்துமாறுகேட்டதற்கு 06.09.2019ல் காசோலையை வழங்கியதாக உள்ள நிலையில் 24.08.2019 முதல் 06.09.2019 வரை 14 நாட்கள் மட்டுமே உள்ளது. ஆனால் புகார்தாரர் 30 நாட்கள் கழித்து திரும்ப போய் கேட்டதாக குறிப்பிட்டுள்ளது உள்ளது முரண்பாடாக உள்ளது. மேலும் எதிரி தரப்பில் புகார்தாரரிடம் எதிரி கடன் பெற்றதாக சொல்லும் சமயம் அவர் கல்லூரிப் படிப்பை படித்து வருபவராக உள்ளதாகவும், தொழில் எதுவும் செய்யவில்லை என்றும், பெருந்தொகையை எதிரியின் தகப்பனாருக்கு தெரியாமல் குடும்ப செலவிற்காக கேட்டதாக சொல்வது நம்பும்படியாக இல்லை என்றும், அதேபோல் எந்தவித ஆவணமும் ஏற்படுத்திக்கொள்ளாமல் கடன் கொடுத்ததாக சொல்வது ஏற்புடையதாக இல்லை என்றும் மறுக்கப்பட்டது. இது பொறுத்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்வான

1) **R.D. Venkatesh Vs. D.M.Ariyappan**, **DATED; 01.09.2017**

Para-12. It is also significant to note that a huge sum of Rs.2,00,000/- as loan was paid without any agreement for payment of interest. There is no explanation for the same. He did not charge any interest.
Para-13. Once the presumptioin is rebutted, it is for the complainant to prove that the cheque was issued towards enforceable liability. As already pointed out, the complainant has not produced any reliable evidence to show that he lent Rs.2,00,000/- to the accused. His mere oral evidence is not sufficient to hold that he lent money to the accused.

என தீர்வு கண்டுள்ளதும் இவ்வழக்கிற்கு பொருந்துவதாக உள்ளது.

அ -vi) மேலும் ம.சா.1 குறுக்கு விசாரணையில் எதிரியின் அப்பாவை மூன்று வருடங்களாக தெரியும் என்றும், எதிரியை எப்படி பழக்கம் என்றால் எதிரியின் தந்தையுடன் நான் பார்த்திருக்கிறேன். எதிரியின் தந்தைக்கு லாரி வாங்கி கொடுத்த வகையில் எதிரியை தனக்கு தெரியும் என்றும் தெரிவித்துள்ளார். மூன்று வருட கால பழக்கத்தின் அடிப்படையில் எதிரியின் தந்தையை அறிந்துள்ள புகார்தாரர் வேறு எந்த வகையிலும்

வியாபார தொடர்போ மற்ற வகையிலோ எதிரியை தனக்கு தெரியும் என குறிப்பிட்டு தெரிவிக்காத நிலையில் எதிரியின் தந்தையை ஆலோசிக்காமலேயே பெருந்தொகையான ரூ.3,50,000 ஐ எந்தவித ஆவணங்களும் ஏற்படுத்திக்கொள்ளாமல் கொடுத்துள்ளார் என்பதும் நம்பும்படியாக இல்லை.

அ -vi) எதிரி மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 139 ன் கீழ் தனது தரப்பினை நிரூபிக்க நேரடியாக சாட்சியங்கள் தர வேண்டிய தேவையில்லை என்றும், புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் நம்பத் தகுந்ததாக இல்லாத பட்சத்தில் அதனை கொண்டே தனது தரப்பினை நிரூபித்ததாக கருதலாம் என மாண்புமிகு உச்ச நீதிமன்ற முன்தீர்வான

1) Kumar Exports Vs. M/s.Sharma Carpets, (2009) 2 SCC 513

Para-20. *The accused in a trial under Section 138 of the Act has two options. He can either show that considerain and debt did not exist or that under the particular circumstances of the case the* ***non-existence of consideratin and debt is so probable that a prudent man ought to suppose that no consideratio and debt existed****. To rebut the statutory presumptions an accused is not expected to prove his defence beyond resonable doubt as is expected of the complainant in a criminal trial. The accused may adduce direct evidence to prove that the note in question was not supported by consideration and that there was no debt or liability to be discharged by him/ However, the court need not insist to every case that the accused should disprove the non-existence of consideration and debt by leading direct evidence because the existence of negative evidence is neither possible nor contemplated. At the same time, it is clear that bare denial of the passing of the consideration and existence of debt, apparently would not serve the purpose of the accused.* ***Something which is probable has to be brough on record for getting the burden of proof shifted to the complainant.*** *To disprove the presumptions, the accused should bring on record such facts and circumstances, upon consideration of which, the court may either believe that the consideration and debt did not exist or their non-existence was so probable that a prudent man would under the circumstances of the case, act upon the plea that they did not exist. Apart from adducing direct evidence to prove that the note in question was not supported by consideration or that he had not incurred any debt or liablility,* ***the accused may also rely upon circumstantial evidence and if the fircumstances so relied upon are compelling, the burden may likewise shift again on to the complainant.*** *The accused may also rely upon presumptions of fact, for instance, those mentionned in Section 114 of the Evidence Act to rebut the presumptions arising under Section 118 and 139 of the Act.*

என தீர்வுகண்டுள்ளது இவ்வழக்கிற்கு பொருந்துவதாக உள்ளது.

அ -vii) மேலும் புகார்தாரர் தனது தரப்பினை ஏற்றுக்கொள்ளும் விதமாகவும், நம்பும்படியாகவும் எந்தவித ஐயப்பாடும் இல்லாத வகையில் சாட்சிய சான்றாவணங்களை முன்னிறுத்த வேண்டும் என்பது பொறுத்து மாண்பமை உச்சநீதிமன்ற முன்தீர்வில்,

Rangappa Vs. Sri Mohan 2010 11 SCC 441

> ***Section 139*** *of the NI Act is stated to be an example of a reverse onus clause which is in tune with the legislative intent of improving the credibility of negotiable instruments. Section 138 of the NI Act provides for speedy remedy in a criminal forum, in relation to dishonour of cheques. Nonetheless, the Supreme Court cautions that the offence under Section 138 of the NI Act is at best a regulatory offence and largely falls in the arena of a civil wrong and therefore the test of proportionality ought to guide the interpretation of the reverse onus clause. An accused may not be expected to discharge an unduly high standard of proof. A reverse onus clause requires the accused to raise a probable defence for creating doubt about the existence of a legally enforceable debt or liability for thwarting the prosecution. The standard of poof for joint so would necessarily be on the basis of "**preponderance of probabilities" and not "beyond shadow of any doubt".***

என (Prepondarance of Probability) பிரிவு 139 மாற்றுமுறை ஆவணச் சட்டத்தில் புகார்தாரர் தரப்பில் முன்வைத்த வாதங்கள் நம்பும்படியாகவும், ஏற்கும்படியாகவும் இல்லை.

அ-viii) எனவே, புகார்தாரர் எந்தவிதமான ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளாமல் கைமாற்றுக் கடனாக 24.08.2019 ல் எதிரிக்கு கொடுத்துள்ளார் என்பதும் நம்பத்தகுந்ததாக இல்லை என தீர்வு கண்டுள்ளதாலும், எதிரி தனது சட்டப்படியான கடனை தீர்க்கும் பொருட்டு காசோலையை புகார்தாரருக்கு வழங்கி இருந்தார் என புகார்தாரர் தரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்களுடன் நிரூபணம் செய்ய தவறியதாக தீர்மானிக்கப்படுகிறது.

ஆ) <u>மேற்படி காசோலையை வசூலுக்காக சட்ட காலத்திற்குள் தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும்.</u>

வழக்கு காசோலை 06.09.2019 ம் தேதியிட்டதாகும். இதனை புகார்தாரர் தனது வங்கி கிளையில் அன்றைய தினமே வசூலுக்காக தாக்கல் செய்ததில் எதிரியின் வங்கிக் கணக்கில் போதிய பணமில்லை (Funds Insufficient) என 09.09.2019 ம் தேதி

திருப்பப்பட்டுள்ளதாக ம.சா.ஆ.**2** குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே காசோலையை புகார்தாரர் தனது வங்கி கணக்கில் சட்ட காலத்திற்குள் வசூலுக்கு தாக்கல் செய்துள்ளதால் மேற்படி கூற்றானது புகார்தாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இ) <u>வழக்கிடை காசோலையானது எதிரியின் கணக்கில் போதிய பணமில்லை என்றோ, எதிரியால் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது என்றோ, எதிரியின் கணக்கு முடிக்கப்பட்டது என்ற காரணங்களுக்காகவோ திருப்பப்பட்டிருக்க வேண்டும்.</u>

எதிரி வழங்கிய காசோலையை புகார்தாரர் வசூலுக்காக செலுத்தியபோது எதரியின் வங்கிக் கணக்கில் போதிய பணமில்லை (Funds Insufficient) என்ற குறிப்புடன் காசோலை மதிப்பு மறுக்கப்பட்டு திருப்பப்பட்டது என்பதை நிரூபிக்கும் வகையில் அதற்கான ரிட்டன் மெமோ புகார்தாரர் தரப்பில் ம.சா.ஆ.**2** குறிப்பாணை சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, வழக்கு காசோலை எதிரியின் வங்கிக் கணக்கில் போதிய பணமில்லை என்ற காரணத்திற்காக வங்கியில் இருந்து திருப்பப்பட்டிருப்பது புகார்தாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

ஈ) <u>புகார்தாரர் காசோலையின் தொகையை கோரி காசோலை திருப்பப்பட்டது சம்பந்தமாக எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டிருக்கிறதா?</u>

காசோலையானது 09.09.2019 தேதி போதிய பணமில்லை என திருப்பப்பட்டுள்ளதால் காசோலை திருப்பப்பட்ட நாளில் இருந்து 30 நாட்களுக்குள் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி இருக்க வேண்டும். வழக்கு காசோலை திரும்பியது குறிப்பிட்டு ம.சா.ஆ.**3** அறிவிப்பு எதிரிக்கு **19.09.2019** ம் தேதியில் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, குறிப்பிட்ட சட்ட கால அவகாசத்திற்குள் எதிரிக்கு அறிவிப்பு புகார்தாரால் அனுப்பப்பட்டுள்ளது என்பதால் சட்ட அறிவிப்பில் எவ்வித காலதாமதமோ குறைபாடோ இல்லை. மேற்கண்ட காரணங்களினால் புகார்தாரர் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி இருக்கிறார் என்பதும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

உ) <u>எதிரி அவ்வறிவிப்பில் கோரப்பட்டுள்ள தொகையை செலுத்த தவறியிருக்க வேண்டும்.</u>

எனவே, எதிரி தன்னுடைய சட்டப்படியான கடனை தீர்க்க வாதிக்கு காசோலையை கொடுத்ததாக புகார்தாரர் நிரூபிக்க தவறியுள்ளதாலும், கடனை கொடுக்கும் அளவிற்கு புகார்தாரருக்கு வசதி வாய்ப்பு உள்ளது என நிரூபிக்க

தவறியுள்ளதாலும், அறிவிப்பில் கண்ட தொகையை எதிரி செலுத்த தவறவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

10) மேற்கண்ட 5 உட்கூறுகளையும் புகார்தாரர் நிரூபணம் செய்தால் தான் எதிரி மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றம் இழைத்ததாக நிரூபணம் செய்ததாக தீர்மானிக்க இயலும். மேற்படி 5 உட்கூறுகளையும் புகார்தாரர் தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்ய தவறியதாகவே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

11) எனவே, எதிரிமீதான மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138-ன் படியான குற்றம் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, எதிரிமீதான மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138-ன் படியான குற்றச்சாட்டிலிருந்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு, 2021ம் ஆண்டு மார்ச் திங்கள் 03ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம். எம்.ஜெயந்தி)
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி-</u>

1. ம.சா.1 சண்முகம்

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்-</u>

1. ம.சா.ஆ.1 06.09.2019 ரூ.3,50,000க்கான காசோலை - அசல்
2. ம.சா.ஆ.2 09.09.2019 ரிட்டன் மெமோ - அசல்
3. ம.சா.ஆ.3 19.09.2019 வழக்கறிஞர் அறிவிப்பு - அலுவலக நகல்
4. ம.சா.ஆ.4 28.09.2019 Track consignment with Postal Receipt - அசல்

<u>எதிரி தரப்பு சாட்சிகள் & சான்றாவணங்கள்</u> - இல்லை

(ஒம்.எம்.ஜெயந்தி)
நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.

<u>குறிப்பு-</u>

1. வழக்கின் தீர்ப்பு பற்றிய விபரம் எதிரிக்கும் புகார்தாரருக்கும் தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் 3 வாய்தாவிற்குமேல் விசாரணைக்காக நிறுத்திவைக்கப்படவில்லை.

CC.677/2019, date: 03.03.2021

எதிரி ஆஜர்.

தீர்ப்பு அவையறிய பகரப்பட்டது.

எதிரிமீதான மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவு 138-ன் படியான குற்றச் சாட்டிலிருந்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

நீதித்துறை நடுவர் எண்.1,
நாமக்கல்.